# இந்திய பொருளாதாரம்

**TNPSC GROUP - I, II/IIA, IV**






S.SATHISH KUMAR

PRAGADEESH PUBLICATION

1ST EDITION

# இந்திய பொருளாதாரம்

**1 ST EDITION**

S.சதிஷ்குமார்

PRAGADEESH PUBLICATION

2 ND FLOOR, OLD HEAD POST OFFICE, NEAR PARK,
GANDHI NAGAR, ATTUR (TK), SALEM (DT), TAMILNADU, PIN - 636102

84892 98781

# இந்திய பொருளாதாரம்

முதல் பதிப்பு – ஆகஸ்ட் 2023

## நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இந்திய பொருளாதாரம் |
| ஆசிரியர் | : | திரு. S.சதிஷ்குமார் |
| மொழி | : | தமிழ் |
| பக்கங்கள் | : | 610 பக்கங்கள் |
| வெளியீடு | : | PRAGADEESH PUBLICATION |
| வலைத்தளம் | : | www.pragadeeshpublication.in |
| மின்னஞ்சல் | : | pragadeeshpublication@gmail.com |
| தொடர்புக்கு | : | 84892 98781 |
| முகவரி | : | 2 ND FLOOR, OLD HEAD POST OFFICE, NEAR PARK, GANDHI NAGAR, ATTUR (TK), SALEM (DT), TAMILNADU, PIN-636102 |
| விலை | : | 600/- |


இந்த புத்தகத்தை ONLINE-ல்
ORDER செய்ய SCAN செய்யவும்

Copy Rights @ pragadeesh publication

All rights are reserved

Warning: No part of this work may be copied, reproduced, adopted, abridged or translated, stored in any retrieval system, computer, photographic or others or transmitted in any form by any means whether electronic, mechanical, digital, photographic, optical or otherwise without a prior written permission of the publisher. Any breach will entail legal action on prosecution without any further notice.

# முதல் பதிப்பின் முன்னுரை

- மொத்தம் 23 தலைப்புகளில் ஒவ்வொரு பகுதிகளிலும் பல தகவல்கள் திரட்டப்பட்டு அத்தகவல்களை நன்கு அலசி ஆராய்ந்து மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.
- சமீபத்திய பொருளாதார நிகழ்வுகளை உள்ளடக்கிய சிறப்பான, தனித்துவமான புத்தகம்.
- போட்டித்தேர்வுகளுக்கு இந்திய பொருளாதாரம் பகுதிக்கு உள்ள ஆங்கில புத்தகங்களுக்கு நிகரான தரமானதொரு தமிழ் புத்தகம் இதுவாகும்.
- **TNPSC GROUP-I (Preliminary Exam & Main Exam), GROUP-II / II A, GROUP-IV, GROUP-VII B, GROUP-VIII** மற்றும் இதர போட்டித்தேர்வுகளுக்கு தயாராகி கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள புத்தகம்.
- தமிழ் வழியில் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகி கொண்டிருக்கும் மாணவர்கள் எளிமையாக புரிந்து கொண்டு படிப்பதற்கு மிகச்சிறப்பான மொழிநடையில் உள்ள புத்தகம்.

## முக்கிய சிறப்பம்சங்கள்

1. புதிய பாடத்திட்டத்தின் படி தேர்விற்கு தேவையான அனைத்து பாடப்பகுதிகளையும் உள்ளடக்கியது.
2. மத்திய அரசின் 175 முக்கிய திட்டங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.
3. 60-க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டு அரசின் சமீபத்திய முக்கிய திட்டங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.
4. 32 பன்னாட்டு பொருளாதார அமைப்புகள் பற்றிய விரிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.
5. 65 பொருளாதார குழுக்கள் பற்றிய விரிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.
6. மொத்தம் 23 பாடத்தலைப்புகளில் 207 துணைத்தலைப்புகளின் கீழ் அனைத்து பகுதிகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

போட்டித்தேர்வுகளில் இந்திய பொருளாதாரம் பகுதியில் கேட்கப்படும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையளித்து தேர்வில் அதிக மதிப்பெண்களை பெற்று உங்களின் வெற்றியை எளிதில் அடைய இப்புத்தகம் மிகவும் உதவும் என்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்படிக்கு
**S.சதிஷ் குமார்**
பிரகதீஸ் பதிப்பகம்

# ஆசிரியர் உரை

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்"



**S.சதிஷ்குமார்**
ஆசிரியர்

தான் செய்து முடிக்க கருதிய செயல்களை சரியான துணையோடு நன்கு திட்டமிட்டு ஆராய்ந்து செய்தால் அச்செயலில் வெற்றியை காண்பதோடு அவரால் செய்ய முடியாத செயல் என்று எதுவும் இல்லை என்ற வள்ளுவரின் வாய்மொழிப்படி சரியான திட்டமிடுதலுடன் சிறப்பான நூல்கள் துணையோடு சாதனைகள் பல படைக்க காத்திருக்கும் போட்டித் தேர்வர்களே, தங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் பல வெற்றிகளை பெறுவதற்காக இந்த இந்திய பொருளாதாரம் புத்தகத்தை நீங்கள் தேர்ந்தெடுத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றி மற்றும் வாழ்த்துக்கள்.

நீங்கள் எங்கள் பதிப்பகத்தின் முதல் வெளியீடான இந்திய அரசியலமைப்பு மற்றும் இரண்டாவது வெளியீடான சமூக பொருளாதாரப் பிரச்சனைகள் புத்தகங்களுக்கு குறுகிய காலத்தில் அளித்த ஆதரவிற்கு மிக்க நன்றி.

எங்களது முந்தைய புத்தகத்தை போன்றே இந்த புத்தகமும் தேர்வில் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இப்புத்தகத்திற்கும் உங்களது வாழ்த்துக்களையும், ஆதரவினையும் அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் TNPSC GROUP-I (Preliminary Exam & Main Exam), GROUP-II / II A, GROUP-IV, GROUP-VII B, GROUP-VIII மற்றும் இதர தேர்வுகளில் இந்திய பொருளாதாரம் என்ற பகுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழ்வழியில் பயிலும் போட்டித்தேர்வர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமையுமாறு எனது அனுபவத்தின் அடிப்படையில் இப்புத்தகத்தை உருவாக்கியுள்ளேன்.

இப்புத்தகத்தில் இந்திய பொருளாதாரம் சார்ந்த பாடப்பகுதிகளை மொத்தம் 23 தலைப்புகளாக பிரித்து ஒவ்வொரு தலைப்பின் கீழும் தேர்வு நோக்கில் பல துணைத்தலைப்புகள் என்ற வடிவில் அனைத்து தகவல்களும் துல்லியமானதாகவும், நேர்த்தியாகவும், எளிமையாகவும் தேர்வில் அதிக மதிப்பெண்களை பெற்றுத்தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட என்னை ஊக்குவித்த என் நண்பர் திரு. S.சிலம்பரசன், இப்புத்தகம் முழுவதையும் தட்டச்சு செய்து முழு வடிவம் கொடுத்த என் மனைவி திருமதி. S.மணிமேகலை, பிழை திருத்தத்தின் போது மிகவும் உதவிய எனது மாணவ, மாணவிகள், S.சரவணன் (புத்தக அட்டை வடிவமைப்பாளர்) ஆகியோருக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

போட்டித்தேர்வில் அதிக மதிப்பெண்களை பெற்று மிகப்பெரிய சாதனையாளர்களாக அரசுப்பணியில் சேர இருக்கும் உங்களுக்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள் மற்றும் நன்றிகள்.

# பொருளடக்கம்


| UNIT | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| UNIT - 1 | **பொருளாதாரம் ஓர் அறிமுகம்**<br>1. பொருளாதாரம் பற்றிய அறிமுகம்<br>2. பொருளியலின் எல்லை<br>3. பொருளாதாரத்தின் அடிப்படை கருத்துகள்<br>4. பொருளியல் ஆய்வு முறைகள்<br>5. பொருளாதார சிந்தனைகள்<br>6. பொருளாதாரத்தின் வகைகள்<br>7. பொருளாதார அமைப்பு முறைகள் | 1.1 - 1.26 |
| UNIT - 2 | **பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும்**<br>1. பொருளாதார வளர்ச்சி<br>2. பொருளாதார முன்னேற்றம்<br>3. பொருளாதார முன்னேற்றத்திற்கான காரணிகள்<br>4. பொருளாதாரத்தினை தடை செய்யும் காரணிகள்<br>5. பொருளாதார முன்னேற்றத்தில் அரசின் பங்கீடு<br>6. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமான ஓப்பீடு | 2.1 - 2.18 |
| UNIT - 3 | **முக்கிய பொருளாதார தலைப்புகள்**<br>1. உற்பத்தி<br>2. நுகர்வு<br>3. பகிர்வு<br>4. தேவை<br>5. அளிப்பு<br>6. விலை | 3.1 - 3.19 |
| UNIT - 4 | **இந்திய பொருளாதாரத்தின் இயல்புகள்**<br>1. சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியாவின் பொருளாதாரம்<br>2. சுதந்திரத்திற்கு பின்னர் இந்தியாவின் பொருளாதாரம்<br>3. இந்திய பொருளாதாரத்தின் முக்கிய சிறப்புகள்<br>4. இந்திய பொருளாதாரம் எதிர்கொள்ளும் சிக்கல்கள்<br>5. இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் பிற நாடுகளின் வளர்ச்சி<br>6. இந்திய சிந்தனையாளர்களின் பொருளாதார பங்களிப்பு<br>7. இந்திய பொருளாதாரத்தின் மேம்பாட்டு செயல்முறைகள் | 4.1 - 4.28 |
| UNIT - 5 | **தேசிய வருமானம்**<br>1. இந்திய தேசிய வருமானத்தின் வரலாறு<br>2. தேசிய வருமானத்தின் பொருள் விளக்கம்<br>3. தேசிய வருமானத்தின் அடிப்படை கூறுகள்<br>4. தேசிய வருமானத்தை அளவிடும் முறைகள்<br>5. தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள நன்மைகள்<br>6. தேசிய வருவாயை கணக்கிடுவதில் உள்ள சிக்கல்கள்<br>7. மூலதன ஆக்கமும், முதலீடும்<br>8. அன்றாட விலை (ம) நிலையான விலையில் நாட்டு வருமானம் | 5.1 - 5.32 |

| UNIT | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| UNIT - 6 | **பொருளாதார திட்டமிடல்**<br>1. பொருளாதார திட்டமிடல்<br>2. திட்டமிடலின் நன்மைகள்<br>3. திட்டமிடலின் வகைகள்<br>4. இந்தியாவில் திட்டமிடல்<br>5. திட்டக்குழு<br>6. தேசிய வளர்ச்சிக்குழு (NDC)<br>7. நிதி ஆயோக் (NITI Aayog)<br>8. நிதிக்குழு<br>9. ஐந்தாண்டுத் திட்டங்கள்<br>10. இருபது அம்சத்திட்டம்<br>11. இந்திய திட்டமிடலின் சாதனைகள்<br>12. இந்திய திட்டமிடலின் தோல்விகளும் பின்னடைவுகளும் | 6.1 - 6.37 |
| UNIT - 7 | **வேளாண்மை மற்றும் நிலச்சீர்திருத்தம்**<br>1. வேளாண்மையின் வளர்ச்சி<br>2. பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு<br>3. இந்தியாவில் விவசாயக் கொள்கை<br>4. இந்தியாவில் உணவு பாதுகாப்பு<br>5. வேளாண் விலைக் கொள்கை<br>6. இந்தியாவில் வேளாண்மை மற்றும் கூட்டுறவு சந்தை<br>7. வேளாண் காப்பீடு<br>8. நிலச்சீர்திருத்தம்<br>9. பசுமைப்புரட்சி<br>10. வெண்மைப்புரட்சி | 7.1 - 7.22 |
| UNIT - 8 | **பணம் மற்றும் பணவியல் கொள்கை**<br>1. பணம்<br>2. பணவியல் கொள்கை<br>3. பணஅளிப்பு<br>4. பணவீக்கம்<br>5. பணவாட்டம்<br>6. இந்தியாவில் கருப்புப்பணம் | 8.1 -8.28 |
| UNIT - 9 | **நிதி மற்றும் நிதிக்கொள்கை**<br>1. பொதுநிதி பற்றிய அறிமுகம்<br>2. பொதுநிதி<br>3. பொதுநிதி மற்றும் தனியார் நிதி ஒப்பீடு<br>4. கூட்டமைப்பு நிதி<br>5. உள்ளாட்சி நிதி<br>6. மத்திய நிதிக்குழு<br>7. மாநில நிதிக்குழு<br>8. வரவு செலவுத் திட்டம் | 9.1 - 9.26 |

| UNIT | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| UNIT - 10 | **வங்கியியல்**<br>1. வங்கியியல்<br>2. வங்கிகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சி<br>3. இந்திய வங்கிகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சி<br>4. இந்திய ரிசர்வ் வங்கி<br>5. இந்திய அளவில் உள்ள வங்கி நிறுவனங்கள்<br>6. பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளின் பங்களிப்பு<br>7. வங்கித்துறையில் சமீபகால முன்னேற்றங்கள் | 10.1 -10.29 |
| UNIT - 11 | **தொழில்துறை**<br>1. தொழில்மயமாக்கல்<br>2. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தொழில்துறைகளின் முக்கியத்துவம்<br>3. தொழிற்கொள்கைகள்<br>4. பொதுத்துறை நிறுவனங்கள்<br>5. இந்திய தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் வளர்ச்சி<br>6. இந்திய தொழிற்சாலைகள்<br>7. பொருளாதார வளாச்சியில் சிறு தொழில்களின் பங்கு<br>8. தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாதல் (LPG)<br>9. தமிழ்நாட்டில் தொழில்மயமாதல்<br>10. இந்திய தொழிலகங்களின் நலிவு<br>11. தொழிற்சாலைகளை ஊக்குவிக்க அரசு மேற்க்கொண்ட முயற்சிகள் | 11.1 -11.32 |
| UNIT - 12 | **பொருளாதார உள்கட்டமைப்பு**<br>1. அடிப்படை தொழில்கள்<br>2. ஆற்றல்<br>3. குடிநீர் மற்றும் சுகாதாரம்<br>4. போக்குவரத்து<br>5. நகர்புற கட்டமைப்பு<br>6. தகவல் தொடர்பு<br>7. முதலீட்டு மாதிரிகள் | 12.1 -12.28 |
| UNIT - 13 | **வரிகள்**<br>1. வரிகள் மற்றும் வரிவிதிப்பு<br>2. வரிவிதிப்பு முறைகள்<br>3. இந்தியாவில் வரிகளின் அமைப்பு<br>★ நேர்முக வரி<br>★ மறைமுக வரி<br>4. மத்திய அரசால் விதிக்கப்படும் வரிகள்<br>5. மாநில அரசால் விதிக்கப்படும் வரிகள்<br>6. இந்தியாவில் விதிக்கப்படுகின்ற சில வரிகள்<br>★ சரக்கு மற்றும் சேவை வரி (GST)<br>★ சரக்கு பரிவர்த்தனை வரி (CTT)<br>★ பத்திர பரிவர்த்தனை வரி (STT)<br>★ மூலதன வரி<br>★ குறைந்தபட்ச மாற்றுவரி (MAT)<br>★ ஈவுத்தொகை விநியோக வரி | 13.1 -13.22 |

| UNIT | தலைப்புகள் | பக்கம் |
| --- | --- | --- |
| UNIT - 13 | 7. நிறுவன வரி சீர்திருத்தம்<br>8. வரி விதிப்பில் ஒம்புட்ஸ்மேனின் தேவை<br>9. வரியின் முக்கியத்துவம்<br>10. வரிகளும் முன்னேற்றமும் | 13.1 -13.22 |
| UNIT - 14 | **ஊரக பொருளாதாரம்**<br>1. ஊரக பொருளாதாரத்தின் இயல்புகள்<br>2. ஊரக பொருளாதாரத்தில் உள்ள பிரச்சனைகள்<br>3. ஊரக வறுமை<br>4. ஊரக வேலையின்மை<br>5. ஊரக கடன் சுமைகள்<br>6. ஊரக நலன் சார்ந்த ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம்<br>7. ஊரக மேம்பாடு<br>8. ஊரக முன்னேற்றத்திற்கான தேவைகள் | 14.1 -14.15 |
| UNIT - 15 | **தமிழ்நாட்டு பொருளாதாரம்**<br>1. தமிழ்நாட்டு பொருளாதாரம் பற்றிய அறிமுகம்<br>2. தமிழ்நாட்டின் பொருளாதார சிறப்பம்சங்கள்<br>3. தமிழ்நாட்டின் மக்கள்தொகை<br>4. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP)<br>5. தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்<br>6. தமிழ்நாட்டில் பணிகள் துறை<br>7. தமிழ்நாட்டில் ஆற்றல் மூலங்கள்<br>8. தமிழ்நாட்டில் வறுமை மற்றும் வேலையின்மை<br>9. தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறைகள்<br>10. தமிழ்நாடு பொருளாதாரம் முன்னோக்கி செல்வதற்கான வழிகள்<br>11. தமிழ்நாடு ஒரு டிரில்லயன் டாலர் பொருளாதாரம் | 15.1 -15.15 |
| UNIT - 16 | **மனித வளமேம்பாடு**<br>1. மனித வள மேம்பாடு பற்றிய அறிமுகம்<br>2. மனித வள மேம்பாட்டுக் குறியீடு<br>3. புதிய குறியீடு<br>4. மனித வள மேம்பாட்டு அறிக்கை-2015<br>5. மனித வள மேம்பாட்டு அறிக்கை-2022<br>6. மனித வள மேம்பாட்டின் முக்கியத்துவம்<br>7. மனித வள மேம்பாட்டின் நன்மைகள்<br>8. வாழ்க்கை தரக் குறியீடு (PQLI)<br>9. மொத்த நாட்டு மகிழ்ச்சி குறியீடு (GNHI) | 16.1 -16.9 |
| UNIT - 17 | **பன்னாட்டு பொருளாதாரம்**<br>1. பன்னாட்டு பொருளாதாரம் ஓர் அறிமுகம்<br>2. வாணிபம்<br>3. வாணிபக்கொடுப்பல் நிலையும், அயல்நாட்டு செலுத்துசமநிலையும்<br>4. அயல்நாட்டு வாணிபம் | 17.1 -17.13 |

| UNIT | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| UNIT - 17 | 5. பன்னாட்டு பொருளாதாரத்தின் நன்மைகள்<br>6. பன்னாட்டு பொருளாதாரத்தின் தீமைகள்<br>7. அந்நிய செலாவணி மாற்று வீதம்<br>8. அந்நிய நேரடி மூலதனம் | 17.1 -17.13 |
| UNIT - 18 | **பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்**<br>1. ஐ.நா. சபை<br>2. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் (ம) கலாச்சார அமைப்பு (UNESCO)<br>3. ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF)<br>4. உலக சுகாதார அமைப்பு (WHO)<br>5. மறுகட்டமைப்பு (ம) மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி (IBRD)<br>6. பன்னாட்டு பண நிதியம் (IMF)<br>7. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)<br>8. உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)<br>9. ஆசிய பசிபிக் பொருளாதார கூட்டமைப்பு (APEC)<br>10. சர்வதேச வளர்ச்சி சங்கம் (IDA)<br>11. உலக வர்த்தக அமைப்பு (WTO)<br>12. காமன்வெல்த் நாடுகளின் அமைப்பு<br>13. பிரிக்ஸ் நாடுகள் (BRICS)<br>14. தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு (ASEAN)<br>15. தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு சங்கம் - சார்க் (SAARC)<br>16. பல்துறை தொழில்நுட்ப (ம) பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (BIMSTEC)<br>17. ஜி-7 நாடுகள் (G7)<br>18. ஜி-20 நாடுகள் (G20)<br>19. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO)<br>20. ஐரோப்பிய ஒன்றியம் (Council of Europe)<br>21. சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு - காட் (GATT)<br>22. பன்முக முதலீட்டு உத்திரவாத நிறுவனம் (MIGA)<br>23. எண்ணெய் (ம) பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (OPEC)<br>24. உலக சுற்றுலா அமைப்பு (UNWTO)<br>25. பன்னாட்டு நிதி கழகம் (IFC)<br>26. சர்வதேச தரநிர்ணய அமைப்பு (ISO)<br>27. இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கம் (IORA)<br>28. இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM)<br>29. சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA)<br>30. ஐக்கிய நாடுகளின் தொழில் வளர்ச்சி அமைப்பு (UNIDO)<br>31. QUAD அமைப்பு<br>32. I2U2 அமைப்பு | 18.1 -18.44 |

| UNIT | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| UNIT - 19 | **பொருளாதார குழுக்கள் (65 குழுக்கள்)**<br>1. வங்கி தொடர்பான குழுக்கள்<br>2. வரி தொடர்பான குழுக்கள்<br>3. வறுமை தொடர்பான குழுக்கள்<br>4. கல்வி தொடர்பான குழுக்கள்<br>5. நிதி தொடர்பான குழுக்கள்<br>6. தொழில்துறை தொடர்பான குழுக்கள்<br>7. மக்கள்தொகை தொடர்பான குழுக்கள்<br>8. குழந்தை தொழிலாளர் தொடர்பான குழுக்கள்<br>9. வேளாண் சுகாதாரம் தொடர்பான குழுக்கள்<br>10. பாலியல் தொடர்பான குழுக்கள் | 19.1 -19.20 |
| UNIT - 20 | **சமூக பொருளாதார சிக்கல்கள்**<br>1. மக்கள்தொகை<br>2. வறுமை<br>3. வேலையின்மை<br>4. எழுத்தறிவின்மை | 20.1 -20.29 |
| UNIT - 21 | **மத்திய அரசின் திட்டங்கள்**<br>மத்திய அரசின் திட்டங்கள் (175 திட்டங்கள்)<br>1. கல்வித்துறை தொடர்பான திட்டங்கள்<br>2. பெண்களுக்கான திட்டங்கள்<br>3. சுகாதாரம் தொடர்பான திட்டங்கள்<br>4. வறுமைக்கான திட்டங்கள்<br>5. வேலையின்மைக்கான திட்டங்கள்<br>6. விவசாயம் மற்றும் வேளாண் தொடர்பான திட்டங்கள்<br>7. திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்<br>8. தொழிற்துறை தொடர்பான திட்டங்கள்<br>9. குடிநீர் தொடர்பான திட்டங்கள்<br>10. சுற்றுலா தொடர்பான திட்டங்கள்<br>11. சிறுபான்மையினர் தொடர்பான திட்டங்கள்<br>12. எரிசக்தி தொடர்பான திட்டங்கள்<br>13. மத்திய அரசின் இதர திட்டங்கள் | 21.1 -21.58 |
| UNIT - 22 | **தமிழக அரசின் திட்டங்கள்**<br>தமிழ்நாடு அரசின் சமீபத்திய திட்டங்கள் (60 திட்டங்கள்)<br>1. கல்வி தொடர்பான திட்டங்கள்<br>2. சுகாதாரம் தொடர்பான திட்டங்கள்<br>3. பெண்கள் தொடர்பான திட்டங்கள்<br>4. மேம்பாடு தொடர்பான திட்டங்கள்<br>5. விவசாயம் தொடர்பான திட்டங்கள்<br>6. தொழிற்துறை தொடர்பான திட்டங்கள்<br>7. தமிழ்நாடு அரசின் இதர திட்டங்கள். | 22.1 -22.25 |
| UNIT - 23 | **இதர சில முக்கிய தலைப்புகள்**<br>1. மத்திய பட்ஜெட் (2023-2024)<br>2. தமிழ்நாடு அரசு பட்ஜெட் (2023-2024)<br>3. பொருளாதார ஆய்வறிக்கை (2022-2023) | 23.1 -23.12 |

# 3 ● முக்கிய பொருளாதார தலைப்புகள்

***விளக்கப்பட்டுள்ள தலைப்புகள்***

1. *உற்பத்தி*
2. *நுகர்வு*
3. *பகிர்வு*
4. *தேவை*
5. *அளிப்பு*
6. *விலை*

***உற்பத்தி***

1. ***உற்பத்தி பொருள் விளக்கம்***
2. ***உற்பத்தியின் வகைகள்***
3. ***உற்பத்தி பயன்பாட்டின் வகைகள்***
4. ***உற்பத்திக்கான காரணிகள்***
5. ***உற்பத்தி சார்பு***
6. ***பொருளாதார சிக்கனங்கள்***

***உற்பத்தி பொருள் விளக்கம்***

- நுகர்வோரின் பயன்பாட்டிற்காக மூலப்பொருளையும், மூலப்பொருள் அல்லாதவற்றையும் ஒன்றிணைத்து, ஒரு பொருளை உருவாக்கும் செயலே உற்பத்தி எனப்படுகிறது. இ∴து ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப சிறந்த சேவையையும் மதிப்பையும் அளிப்பதில் இன்றியமையாத இடத்தினைப் பெறுகிறது.
- உற்பத்தி என்பது பல்வேறு வகையான இடுபொருட்களைப் பயன்படுத்தி இறுதிப் பொருட்களை உற்பத்தி செய்து நுகர்வுக்காக வழங்குதல் ஆகும். இது பொருளாதார நலனை உருவாக்குவதில் துணை செய்கிறது.
- பொருளியலில் உற்பத்தி என்பது “புதிதாக உருவாக்குதல்” அல்லது “மதிப்பைக் கூட்டுதல்” ஆகும். அதாவது உற்பத்தி என்பது உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றுவதாகும்.
- மாறாக பொருளாதாரத்தில் இதனை, மாற்றத்தக்க மதிப்புடைய பொருள்களையும், சேவைகளையும் உருவாக்குவதை குறிக்கிறது.
- உற்பத்தி என்பது பல்வேறு நிலைகளை கொண்டது. நாம் உற்பத்தி செய்கின்ற அளவினைப் பொறுத்து உற்பத்திச் செலவினை தீர்மானிக்கிறது. அதிக உற்பத்தி உள்ள போது உற்பத்திக்கான சராசரி செலவு குறையும்.
- இதன் காரணமாகவே, தொழில் முனைவோர்கள் அவர்களின் உற்பத்திப் பொருட்களை அதிகரிக்க ஆர்வம் காட்டுவார்கள். மேலும் அங்காடியில் பொருட்களின் அளிப்பு அதிகமாகி பொருட்கள் குறைவான விலையில் கிடைப்பதற்கு வாய்ப்புகள் உண்டாகின்றன.

> ***“உற்பத்தி என்பது பரிமாற்றத்தின் மூலம் மற்ற மனிதர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் செயல்பாடாகும்”.*** *- J.R.ஹிக்ஸ்*

## தேசிய வருமானத்தின் அடிப்படை கூறுகள்

1. *மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)*
2. *மொத்த நாட்டு உற்பத்தி (GNP)*
3. *நிகர நாட்டு உற்பத்தி (NNP)*
4. *நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)*
5. *காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி (NNP at Factor Cost)*
6. *தனிநபர் வருமானம் (PI)*
7. *செலவழிக்கக் கூடிய வருமானம் (DI)*
8. *தலா வருமானம் (PCI)*
9. *உண்மை வருமானம் (RI)*

***மத்திய புள்ளியியல் அமைப்பு -Central Statistical Organisation - (CSO)***

- ★ CSO என்பது புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு அமைப்பு ஆகும்.
  - *அமைவிடம்* - டெல்லி
  - *உருவாக்கம்* - 1951-மே-2
  - *அமைச்சர்* - ராஜா ராவ் இந்திரஜித் சிங் (ஜூன் 2023-ன் படி)
  - *கணக்கெடுப்புகள் (நோக்கங்கள்) -*
    1. தேசிய வருமான கணக்கீடு
    2. பொருளாதார கணக்கீடு
    3. மனித வளர்ச்சி புள்ளி விவரங்கள்
    4. ஐந்தாண்டு திட்ட புள்ளி விவரங்கள்
- ★ புள்ளியியல் அமைச்சகம் ஆனது 2019-இல் இருந்து தனது மூல அமைப்பிலிருந்து பிரிந்து செயல்பட்டது

## 1.மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP-Gross Domestic Product)

- ❖ மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே ஆகும்.
- ❖ GDP என்பது பொருளாதாரத்தில் மிக முக்கியமான புள்ளிவிவரங்களில் ஒன்றாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியை அளவிடுவது ஒரு தேசம் எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றிய புரிதலை ஏற்படுத்துகிறது.
- ❖ மொத்த உள்நாட்டு உற்பத்தியை அளவிடுவது ஒரு தேசத்தின் உற்பத்தியினை அளவிடுதலுக்குச் சமமாகும். அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கிறது என்றால், நாட்டு வருமானம் அதிகரித்து வருவதையும், வலுவான பொருளாதாரத்தையும் குறிக்கிறது.
- ❖ செலவீனம் மூலம் GDP-யை கணக்கிடும் சமன்பாடு பின்வருமாறு,

***GDP=C+I+G+(X-M)***

C - நுகர்வு பண்டங்கள் (Consumer Goods)
I - முதலீட்டு பண்டங்கள் (Investments)
G- அரசின் வாங்குதல்கள் (Government Purchases)
(X-M) - ஏற்றுமதி - இறக்குமதி

***GDP வகைகள் -***

- ★ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று வெவ்வேறு வகைகள் உள்ளன, இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருளாதார கண்ணோட்டங்களைக் காட்டுகிறது. அவை
  1. உண்மையான GDP (Real GDP)
  2. பெயரளவு GDP (Nominal GDP)
  3. தனிநபர் GDP (GDP per capital).

## பனிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012-2017)

*திட்டகாலம்* - *2012-2017*
*கருப்பொருள்* - ***வேகமான, நிலையான மற்றும் அதிக உள்ளார்ந்த வளர்ச்சி***
*இத்திட்டத்தின் பொருளாதார வளர்ச்சி இலக்கு* - *8.2%*
*இத்திட்டத்தின் பொருளாதார வளர்ச்சி* - *8.0%*
*இத்திட்டத்தின் நோக்கங்கள்:-*

- ★ உயர்கல்வி துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.
- ★ இரயில்வே திட்டங்களில் முதலீடு செய்தல்.
- ★ மது, புகையிலைக்கு புதிய வரி விதித்தல்.

    விவசாய துறைக்கான வளர்ச்சி இலக்கு - 4%
    தொழில் துறைக்கான வளர்ச்சி இலக்கு - 9.6%
    சேவை துறைக்கான வளர்ச்சி இலக்கு - 10%

- ★ இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு 47,70,000 கோடி ஆகும்.
- ★ விவசாயம் அல்லாத பிற துறைகளில் 50கோடி வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.
- ★ 88,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்தல்.
- ★ உணவு, உரங்கள் மற்றும் பெட்ரோலியம் ஆகியவற்றின் மானியங்களை நேரடியாக 12-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் பரிமாற்றம் செய்ய பரிந்துரைத்தை திட்டக்குழு ஏற்றுக் கொண்டது.
- ★ இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக கல்வி, சுகாதாரம் ஆகிய இருதுறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன.
- ★ சுகாதாரத்துறையைப் பொறுத்தவரை பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரத்தில் (துப்புரவு) செலவினங்கள் அதிகரிக்கப்படும்.
- ★ கல்வியில் உள்ள பாலின மற்றும் சமூக இடைவெளியைக் குறைத்தல்.
- ★ ஆதார் அட்டையின் மூலம் முக்கிய சேவைகளை வழங்குதல்.
- ★ இத்திட்டமானது அனல் மின் நிலையங்கள், புனல் மின் நிலையங்கள், புதுப்பிக்கத் தக்க வளங்கள், வேலைவாய்ப்பு, கல்வி, பொருளாதார மேம்பாடு போன்ற அனைத்துத் துறைகளிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற திட்டமாகும்.

*இதுவரை இந்தியா 12 ஐந்தாண்டுத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டமே (2012-2017) இறுதியான ஐந்தாண்டு திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு ஐந்தாண்டு திட்டங்களை நிறுத்தி விட்டு அதற்கு பதிலாக நிதி ஆயோக்கின் மூலம் வளர்ச்சி திட்டங்களை மேம்படுத்த முடிவு செய்துள்ளது.*

## இருபது அம்சத்திட்டம்

*தொடக்கம் -*

- ★ 20 அம்சத்திட்டமானது 1975-ல் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.
- ★ இத்திட்டமானது 1982, 1986, மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தி அமைக்கப்பட்டது.
- ★ 2006-ம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட 20-அம்சத்திட்டம் ஏப்ரல் 1, 2007-ல் நடைமுறைக்கு வந்தது

*இத்திட்டத்தின் நோக்கங்கள் -*

- ★ சிறப்புத் திட்டங்களின் மூலம் வறுமையை ஒழித்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், வீட்டுவசதி, குடும்பநலன் மேம்படுத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.
- ★ வறுமை ஒழிப்பை முக்கிய நோக்கமாக கொண்டது. ஏழை மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு ஆகியவற்றை இலக்குகளாகக் கொண்டுள்ளது.

**20 அம்சங்கள்**

1. வறுமை ஒழிப்பு
2. மக்களுக்கு அதிகாரம் அளித்தல்
3. விவசாயிகளுக்கு ஆதரவு அளித்தல்
4. தொழிலாளர் நலன் காத்தல்
5. சுத்தமான குடிநீர் வழங்குதல்
6. உணவு பாதுகாப்பை உறுதி செய்தல்
7. அனைவருக்கும் வீட்டு வசதியை உருவாக்குதல்
8. அனைவருக்கும் ஆரோக்கியம்
9. அனைவருக்கும் கல்வி
10. பெண்கள் நலன்
11. SC/ST/OBC/சிறுபான்மையினர் நலன் காத்தல்.
12. குழந்தைகள் நலன்
13. இளைஞர் மேம்பாடு
14. குடிசைப் பகுதி மேம்பாடு
15. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காடு வளர்ப்பு
16. சமூக பாதுகாப்பு
17. கிராமங்களில் சாலை வசதிகளை உருவாக்குதல்
18. பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சி
19. கிராமப்புறங்களை மேம்படுத்துதல்
20. தகவல் தொழில் நுட்பம் மற்றும் மின் ஆளுமை.

***கண்காணிப்பு***

- ★ இருபது அம்சத்திட்டம் 2006-இன் கண்காணிப்பு பணியை மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் செய்கிறது.
- ★ 13 தரவு நிலைகளில் 65 செயல்பாடுகள் கண்காணிப்பு செய்யப்படுகிறது.

***இத்திட்டத்தின் செயல்பாடுகள் -***

- ★ புதிய கொள்கைகள் கடைசியாக 2006-ல் அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு 20 அம்சத்திட்டங்களில் பல புதிய கொள்கைகளை புகுத்தியது.
- ★ 20 அம்சத்திட்டத்தில் ஒன்பது திட்டங்கள் ஊரக மேம்பாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட்டது.
- ★ அதே சமயம் 20 அம்சத் திட்டங்கள் அனைத்திற்கும் சம அளவில் முக்கியத்துவம் தரப்படும் என கூறப்பட்டது.
- ★ “அனைவருக்கும் வீடு” போன்ற புதிய அம்சங்களையும் புகுத்த மத்திய அரச முடிவு செய்தது.
- ★ நிலையான வளர்ச்சி, தூய்மையான குடிநீர், வறுமையை முற்றிலும் ஒழித்தல் ஆகியவற்றை இருபது அம்ச திட்ட மதிப்பீட்டுக்கான வரையறைக்குள் சேர்க்கப்பட்டது.
- ★ இத்திட்டமானது 1982-ல் மாற்றியமைக்கப்பட்டது. 1986-களிலும் மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டமானது, TPP 86 என பெயரிட்டு மொத்தம் 119 திட்டங்கள் 20 அம்சத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களின் மேம்பாட்டிற்காக சேர்க்கப்பட்டன.
- ★ இதில் 54 திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் பற்றியும், 65 திட்டங்கள் உடல்நலம் சார்ந்த திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தது.
- ★ இத்திட்டங்களை, மத்திய அரசானது, மாநில (ம) யூனியன் பிரதேசங்களை கலந்து ஆலோசித்தப்பிறகு, கொண்டுவரப்படுகிறது.
- ★ 20 அம்சத்திட்டமானது 5 ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- ★ 21-ஆம் நூற்றாண்டின் வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்தினை கருத்தில் கொண்டு, இத்திட்டமானது திருத்தி அமைக்கப்பட்டது. ‘TPP86’ என்ற 20 அம்சத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டு இத்திட்டம் 2006-யில் மாற்றியமைக்கப்பட்டது.
- ★ இடைக்காலத்தில் 2015-ல் மத்திய புள்ளியியல் அமைச்சரவை ஆனது இத்திட்டத்தினை நிறுத்த பிரதம அமைச்சருடன் பரிந்துரை செய்தது.

*பணவீக்கம் தொடர்புடைய முக்கிய சொற்கள்*

1. *பணவீக்க இடைவெளி (Inflationary Gap)*
2. *பணவாட்ட இடைவெளி (Deflationary Gap)*
3. *பணவீக்க வரி (Inflation Tax)*
4. *பணவீக்க சுழல் (Inflation Spiral)*
5. *பணவீக்க கணக்கியல் (Inflation Accounting)*
6. *உயர் பணவீக்கம் (Inflation Premium)*
7. *பிலிப்ஸ் வளைவு (Phillips Curve)*
8. *பிரதிபலிப்பு (Reflation)*
9. *தேக்கநிலை (Stagflation)*

*1. பணவீக்க இடைவெளி -*

★ தேசிய வருமானத்தை விட மொத்த அரசாங்கச் செலவினம் அதிகமாக இருப்பது பணவீக்க இடைவெளி எனப்படும்.

★ இது உற்பத்தி அளவை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டது. இவை இறுதியில் கூடுதல் பணத்தை உருவாக்குவதன் காரணமாக விலைகளை உயர்த்துகிறது.

*2. பணவாட்ட இடைவெளி -*

★ தேசிய வருமானத்தை விட அரசாங்கத்தின் மொத்த செலவினங்களின் பற்றாக்குறை பொருளாதாரத்தில் பணவாட்ட இடைவெளிகளை உருவாக்குகிறது.

★ இது தேவையைவிட அதிகமாக உற்பத்தி செய்யும் சூழ்நிலையாகும். பொதுவாக பொருளாதாரம் தேவையின் மட்டத்தில் பொதுவான மந்த நிலைக்கு செல்கிறது. இது வெளியீட்டு இடைவெளி என்றும் அழைக்கப்படுகிறது.

*3. பணவீக்க வரி -*

★ பணவீக்கம் பணத்தின் மதிப்பை குறைக்கிறது மற்றும் நாணயத்தை வைத்திருப்பவர்கள் இந்த செயல்பாட்டில் பாதிக்கின்றனர்.

★ பணத்தை அச்சடித்து பொருளாதாரத்தில் புழக்கத்தில் விடுவதற்கு அரசாங்கங்களுக்கு அதிகாரம் இருப்பதால் இந்தச் சட்டம் அரசாங்கங்களுக்கு வருமானமாகச் செயல்படுகிறது. இதனால் பணவீக்கம் ஒரு வரியாக செயல்படுவது போல் தெரிகிறது.

★ பணவீக்கம் என்பது "Seigniorage" என்றும் அழைக்கப்படுகிறது. இதன் பொருள், பணவீக்கம் எப்போதும் பற்றாக்குறை நிதியத்திற்கு அரசாங்கம் சொல்லக்கூடிய அளவில் பணவீக்க விகிதத்தினை நேரடியாக பிரதிபலிக்கிறது.

*4. பணவீக்க சுழல் -*

★ ஒரு பொருளாதாரத்தில் பணவீக்க நிலைமை ஊதியம் (ம) விலை தொடர்பு ஆகியவற்றின் செயல்முறையின் விளைவாக, ‘‘ஊதியங்கள் விலைகளை அழுத்தும்போதும் (ம) விலைகள் ஊதியங்களை உயர்த்தும் போதும்’’ பணவீக்க சுழல் ஏற்படுகிறது. இது “கூலி-விலை சுழல்” என்றும் அழைக்கப்படுகிறது.

★ இந்த ஊதிய விலை தொடர்பு ஒரு நம்பத்தகுந்த காரணமாக பார்க்கப்பட்டது.

★ 1935-ம் ஆண்டு அமெரிக்கப் பொருளாதாரத்தில் முதல் முறையாக பணவீக்க சுழல் ஏற்பட்டது.

*5. பணவீக்க கணக்கியல் -*

★ பணவீக்க கணக்கியல் என்பது தனியார் கணக்கியல் துறையில் பிரபலமான ஒரு சொல் ஆகும். பணவீக்க கணக்கியல் அடிப்படையில் பணவீக்கம் காரணமாக நிறுவனங்களின் லாபம் மிகைப்படுத்தப்படுகிறது.

★ தற்போதைய பணவீக்கத்தின் விளைவுகளை சரிசெய்த பிறகு ஒரு நிறுவனம் அதன் இலாபத்தை கணக்கிடும் போது கிடைக்கும் இலாபத்தொகையே கணக்கியல் எனப்படுகிறது.

★ அத்தகைய இலாபங்கள் நிறுவனத்தின் உண்மையான லாபமாகும் இதனை பணவீக்கத்தின் வரலாற்று விகிதத்துடன் ஒப்பிடலாம். (Inflation of the Base Year)

## RBI-ன் கட்டமைப்பு

- அதிகாரப்பூர்வ இயக்குநர்கள்
  - ஆளுநர்
  - துணைநிலை ஆளுநர்கள் (குறைந்தப்பட்சம் நான்கு)
- அதிகாரப்பூர்வமற்ற இயக்குநர்கள்
  - பரிந்துரைக்கபட்டது (10+2)
  - மற்றவை (உள்ளூர் அமைப்புகளிலிருந்தும் தலா 4 பேர்)

❖ ரிசர்வ் வங்கியில் முடிவெடுக்கும் முக்கிய அமைப்பாக மத்திய இயக்குநர்கள் குழு உள்ளது. இது அதிகாரப்பூர்வ (ம) அதிகாரப்பூர்வமற்ற இயக்குநர்களால் ஆனது.

❖ அதிகாரப்பூர்வ இயக்குநர்கள் என்போா் ஆளுநா் (ம) துணை ஆளுநா் ஆவாா்.

❖ இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 பிரிவு (8)ன் படி ஒரு ஆளுநா் மற்றும் நான்கு துணை ஆளுநர்கள் உள்ளனர். எனவே ரிசர்வ் வங்கியின் மத்திய இயக்குநர்கள் குழுவில் அதிகபட்சமாக 5 அதிகாரப்பூர்வ இயக்குநர்கள் இருப்பார்கள்.

❖ ஆளுநர் (ம) துணை ஆளுநர்கள் மத்திய அரசால் நியமிக்கபடுவார்கள். சேவையின் காலம் அதிகபட்சம் 3 ஆண்டுகள் மற்றும் மீண்டும் நியமிக்கப்படலாம்.

❖ மேலும் ரிசர்வ் வங்கியில் 16 அதிகாரப்பூர்வமற்ற இயக்குநர்கள் உள்ளனர். அவர்களில் 4 பேர் டெல்லி, சென்னை, கொல்கத்தா மற்றும் மும்பையில் உள்ள உள்ளூர் வாரியங்களிலிருந்து பிரதிநிதித்துவபடுத்தப்படுகின்றனர். இது இந்தியாவின் 4 பிராந்தியங்களை குறிக்கும்.

❖ மீதமுள்ள 12 பேர் இந்திய ரிசர்வ் வங்கியில் பரிந்துரைக்கபடுகிறார்கள். இந்த 12 ஆளுமைகளும் இந்திய பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆவர்.

❖ மத்திய இயக்குநர்கள் குழு ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது. 6 கூட்டங்களை நடத்துகிறது. இதில் குறைந்தபட்சம் 4 கூட்டமாவது ஒவ்வொரு காலாண்டிலும் (ஒவ்வொரு 3 மாதங்களுக்கும்) நடைபெறும் என்றாலும் பொதுவாக மத்திய குழு ஒவ்வொரு வாரமும் (புதன்கிழமை) கூடும்.

❖ ரிசர்வ் வங்கியின் நிதி வாரியத்தில் உள்ள உதவி அமைப்புகள் மேற்பார்வை (BFS) மற்றும் பணம் செலுத்துவதற்கான வாரிய தீர்வு அமைப்புகள் (BPSS) இவை இரண்டும் ரிசர்வ் வங்கி கவர்னர் தலைமையில் உள்ளன.

| | |
|---|---|
| பண அச்சகம் | ★ நான்கு அச்சு கூடங்கள் வங்கி நோட்டுகளை அச்சிட்டு வழங்குகின்றன. |
| இடம் | 1. தேவாஸ் (மத்திய பிரதேசம்)<br>2. நாசிக் (மகாராஷ்ட்ரா)<br>3. மைசூர் (கர்நாடகா)<br>4. சல்போனி (மேற்கு வங்காளம்) |
| அரசுக்கு சொந்தமானது | ★ மத்திய பிரதேசம் (ம) மகாராஷ்ட்ராவில் உள்ள அச்சகங்கள் கோலின் (GoI) முழு சொந்த நிறுவனமான இந்திய பாதுகாப்பு அச்சகம் மற்றும் நாணயங்கள் உற்பத்தி கழகம் இதில் SPMCIL-க்கு சொந்தமானது. SPMCIL மட்டுமே பொருளாதார விவகாரங்கள் துறையின் (mof) கீழ் உள்ள ஒரே பொதுத்துறை நிறுவனமாகும். |
| RBI-க்கு சொந்தமானது | ★ கர்நாடகா மற்றும் மேற்கு வங்கத்தில் உள்ள அச்சகங்கள் பாரதிய ரிசர்வ் வங்கி நோட் முத்ரன் பிரைவேட் லிமிடெட் BRBNMPL-க்கு சொந்தமானது. இதில் RBI முழு உரிமையாளராக உள்ளது. |
| நாணயங்கள் | ★ கோல் (GoI) என்பது நாணயங்களை வழங்கும் அதிகாரம் (ம) ரிசர்வ் வங்கியின் தேவைக்கேற்ப அவ்வவ்போது நாணயங்களை விநியோகம் செய்கிறது. மேலும் மத்திய அரசின் சார்பில் ரிசர்வ் வங்கி நாணயங்களை புழக்கத்தில் விடுகிறது. |

## தொழிற்கொள்கைகள் (Industrial Policy)

- நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் மிகச் சிறிய அளவிலான தொழில்துறையையே கொண்டிருந்தது. மேலும் நாட்டிற்கு குறிப்பிடத்தக்க தொழிற்துறைக் கொள்கைகளும் இல்லை.
- விடுதலைக்கு பின்னர் தொழில்மயமாக்கல் நோக்கிய முதல்கட்ட முயற்சியாக 1948-ம் ஆண்டு தொழில்துறை கொள்கைத் தீர்மானம் அறிமுகப்படுத்தப்பட்டது.

*தொழிற்துறைக் கொள்கையின் நோக்கங்கள் -*

1. தொழிற்துறை மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்தல்
2. இலாபகரமான வேலைவாய்ப்புகளை வழங்குதல்
3. வறுமை ஒழிப்பு
4. தொழில்நுட்பத்தைப் புதுப்பித்தல் மற்றும் தொழிற்துறையை நவீனமயமாக்குதல்.
5. சுயநம்பிக்கை மற்றும் தற்சார்பான பொருளாதாரத்தை அடைதல்.
6. தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்.

## தொழிற்கொள்கையின் வளர்ச்சி

- சுதந்திர இந்தியாவின் விரைவான தொழில்மயமாக்கத்திற்கும் சமுதாயப் படைப்பிற்கு ஏற்றாற்போல் இந்தியாவின் தொழிற்கொள்கை இருந்தது. கீழ்க்கண்ட ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட தொழிற்கொள்கையை ஆராய்ந்தறியும் போது இந்நோக்கம் புலப்படுகிறது.

*இந்திய தொழிற்கொள்கைகள்*

1. ***1948 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை***
2. ***1956 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை***
3. ***1977 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை***
4. ***1980 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை***
5. ***1991 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை***

### 1. 1948-ஆம் ஆண்டு தொழிற்கொள்கை -

- ஒரு நாட்டின் தொழில்முறையும் தொழில் வளர்ச்சியும் அந்நாட்டில் உருவாக்கப்படுகின்ற தொழிற்கொள்கையையே சார்ந்துள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளில் தொழில்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு அரசிற்கு உண்டு. அரசு அவ்வப்பொழுது தொழிற்கொள்கை அறிவித்து வருகின்றது.
- இந்தியாவின் முதல் தொழிற்கொள்கை ஏப்ரல்-1948-ம் ஆண்டு வெளியிடப்பட்டது.
- இரஷ்யாவின் ஐந்தாண்டு திட்டங்களின் வாயிலாக விரைவான வளர்ச்சியடைந்து தன்னிறைவை எட்டியதைக் கண்ட இந்திய தலைவர்கள் அந்நாட்டில் உள்ளது போன்றே கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்த முற்பட்டனர்.
- காதி மற்றும் கிராமத் தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல்.
- இத்தொழிற்கொள்கை நாட்டின் கலப்பு பொருளாதாரத்திற்கு வழிவகுத்தது.
- இத்தொழிற்கொள்கை தொழில்துறையை நான்கு வகைகளாக பிரித்தது. அவை:
    1. அரசின் முற்றுரிமை (அரசின் ஏகபோக உரிமை)
    2. அடிப்படை தொழிற்சாலைகள்
    3. ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்சாலைகள்
    4. தனியார் தொழிற்சாலைகள்

***அரசின் முற்றுரிமை பெற்ற தொழில் -***

- இது மைய அரசின் ஒட்டுமொத்த உரிமையை கொண்டுள்ளது.
    1. ஆயுதங்கள்
    2. இராணுவ தளவாடங்களின் உற்பத்தி
    3. இரயில்வே
    4. அணுசக்தி உற்பத்தி மற்றும் கட்டுப்பாடுகள் போன்ற துறைகளை உள்ளடக்கியது.

## மறைமுக வரி

- ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது மறைமுகவரி எனப்படும்.
- பேராசிரியர் டால்டனின் கூற்றுப்படி மறைமுக வரி என்பது ஒருவர் மீது வரி விதிக்கப்பட்டு மற்றொருவர் பகுதியாகவோ (அ) முழுமையாகவோ வரி செலுத்துவதாகும்.
- இதில் வரி விதிக்கப்பட்டவர் ஒருவர் வரி சுமையை சுமப்பவர் வேறு ஒருவராவார்.

*(எ.கா)*

- ஒரு பொருளை (மகிழுந்து/இருசக்கர வண்டி போன்றவை) விற்பனை செய்யும் விற்பனையாளர் தொடக்கத்தில் அந்தப் பொருளுக்கான வரிச்சுமையை ஏற்கிறார்.
- அவரிடமிருந்து அந்த பொருளை யார் வாங்குகிறார்களோ அவர்களே பின்னர் அந்த பொருளுக்கான வரிச்சுமை முழுவதையும் ஏற்கிறார்கள்.
- இவ்வரியானது அரசுக்கு மறைமுகமாக செலுத்தப்படுகிறது. இந்தவரிச்சுமை எளிதாக மற்றொரு நபர் மீது மாற்ற முடியும்.

*சில மறைமுக வரிகள்*

1. *சேவை வரி*
2. *விற்பனை வரி*
3. *பொழுதுபோக்கு வரி*
4. *கலால் (ஆயத்தீர்வை)வரி*
5. *முத்திரைத்தாள் வரி*
6. *சுங்க தீர்வை*
7. *குவித்தலுக்கு எதிரான வரி*
8. *எதிர்சமக் கலால் வரி*
9. *நுழைவு வரி*
10. *மதிப்பு கூட்டு வரி (VAT)*
11. *உற்பத்தி வரி*
12. *சுங்க வரியும் சாலை வரியும்*

### 1. சேவை வரி -

- சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரியாகும். இந்தவரி சேவையை பெறுபவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டு மத்திய அரசுக்கு செலுத்தப்படுகிறது. 1994-இல் சேவை வரி மத்திய அரசால் விதிக்கப்பட்டது.
  **(எ.கா)** தொலைபேசி, காப்பீடு, உணவு விடுதி போன்ற சேவைகளாகும்.

### 2. விற்பனை வரி -

- கடை உரிமையாளர் அல்லது சில்லறை விற்பனையாளர்களால் முதலில் செலுத்தப்பட்டு வரிச்சுமையை பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விற்பனை வரியுடன் நுகர்வோர்களுக்கு மாற்றப்படுவது விற்பனை வரியாகும். இந்தியாவில் விற்பனை வரியை முதலில் அறிமுகப்படுத்தியவர் இராஜாஜி ஆவார்

### 3. பொழுதுபோக்கு வரி -

- எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும் அதன் மீது அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும்.
  **(எ.கா)** திரையரங்கு உரிமையாளர் மீது விதிக்கப்படுகின்ற வரியை திரைப்படம் காண வருபவர்கள் மீது மாற்றுகின்ற வரியாகும். காணொலி விளையாட்டுகள், மேடை அரங்கேற்ற நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், பூங்காக்கள் போன்றவை அடங்கும்.

### 4. கலால் (ஆயத்தீர்வை) வரி -

- மொத்த விற்பனையாளர்களிடமிருந்தும், சில்லறை விற்பனையாளர்களிடமிருந்தும் பொருள்களை வாங்குபவர்கள் செலுத்த வேண்டிய வரி, கலால் வரியாகும். இந்தியாவில் கலால் வரியானது மத்திய அரசால் விதிக்கப்படுகிறது.
- இந்தியாவில் மாற்றியமைக்கப்பட்ட மதிப்புக் கூட்டுவரியே ஆயத்தீர்வை எனப்படும். ஆயத்தீர்வை 1986-ல் நடைமுறைக்கு வந்தது.

## தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு
## *(Association of South East Asian Nations - ASEAN)*

- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு என்பது தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பத்து உறுப்பு நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார ஒன்றியமாகும்.
- ஆசியாவின் ஜஹார்த்தாவில் ஆகஸ்ட் 8, 1967-ம் ஆண்டு இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய ஐந்து நாடுகளால் தொடங்கப்பட்டது.
- புருனை, வியட்நாம், லாவோஸ், மியான்மர் மற்றும் கம்போடியா ஆகிய ஐந்து நாடுகள் பிறகு உறுப்பினர்களாக சேர்ந்து கொண்டன.
- இவற்றுடன் சீனா, ஜப்பான், இந்தியா, தென்கொரியா, நியூசிலாந்து, மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய ஆறு நாடுகள் விவாதத்தில் கலந்து கொள்ளும் நாடுகளாக சேர்ந்து கொண்டன.

*தலைமையகம்* - ஜகார்த்தா
*பொது செயலாளர்* - காவ் கிம் ஹர்ன்
*உருவாக்கம்* - ஆகஸ்ட் 8, 1967
*உறுப்பு நாடுகள்* - 10
*அலுவலக மொழி* - ஆங்கிலம்

| தென்கிழக்கு ஆசிய நாடுகள் | உறுப்பினர் (ஆண்டு) |
|---|---|
| புருனை தருசலாம் | 1984 |
| கம்போடியா | 1999 |
| இந்தோனேசியா | 1967 |
| லாவோஸ் | 1997 |
| மலேசியா | 1967 |
| மியான்மர் | 1997 |
| பிலிப்பைன்ஸ் | 1967 |
| சிங்கப்பூர் | 1967 |
| தாய்லாந்து | 1967 |
| வியட்நாம் | 1995 |

- வணிக தடையற்ற பகுதி அமைந்த நாடுகளுக்கு கிடைக்கும் நன்மைகள் அனைத்தும் ஆசியான் நாடுகளுக்கும் கிடைக்கும்.
- ஏனென்றால் உறுப்பு நாடுகள் இறக்குமதி வரிகளை ஒப்பந்தப்படி குறைக்க வேண்டும்.
- இந்த உறுப்பு நாடுகளின் பொதுவான வரலாற்று மற்றும் பண்பாட்டு பின்புலம் பன்னாட்டு வாணிக ஒத்துழைப்பு கூட்டமைப்பை ஒற்றுமையுடன் நடத்துவதை உறுதி செய்கிறது.
- உலகமயமாக்கல் மற்றும் எச்சரிக்கையுடனான ஆசியான் நாடுகளுக்கு பன்னாட்டு வாணிபம் உயிர்மூச்சு போன்றதாகும்.
- உறுப்பு நாட்டு அரசாங்கத்தின் தலைவர்களின் உச்சி மாநாடு ஆசியான் அமைப்புகளின் அதிகாரமிக்க அவையாகும்.
- இது மூன்று ஆண்டுகளுக்கொரு முறை கூடி முடிவுகளை எடுக்கும்.
- ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் முடிவுகளை எடுப்பதில் அடுத்தக்கட்ட அதிகாரமுள்ள துணை அமைப்பாகும்.

### *ஆசியான் நாடுகளுடன் இந்தியா*

- இந்தியா ஆசியாவுடன் 1992-ம் ஆண்டிலிருந்து கூட்டாளியாக செயல்பட தொடங்கியது.
- 1992-ம் ஆண்டில் இந்தியா துறை வாரியான விவாதங்களில் பங்கேற்கும் நாடாக செயல்பட தொடங்கியது.
- ஆசியான் நாடுகள் இந்தியாவிற்கு அருகாமையில் அமைந்துள்ளதால் போக்குவரத்து செலவு குறைவாக உள்ளது. எனவே ஏற்றுமதி எளிதாக நடைபெறுகிறது.

*ஆசியான் அமைப்பின் நோக்கங்கள் -*

- ★ பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றும் பண்பாட்டு மாற்றத்தை துரிதபடுத்துவது.
- ★ ஐ.நா சபையின் கொள்கைகளை கடைபிடித்து தென்கிழக்காசிய பகுதியில் அமைதி மற்றும் உறுதியான சூழ்நிலையை மேம்படுத்துவது.
- ★ அரசு துறை தணிக்கையில் உள்ள அறிவையும் அனுபவத்தையும் பரிமாறி கொள்வதன் மூலம் உறுப்பினர்களை ஒன்றிணைந்து செயல்பட வைப்பது.
- ★ கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு பொருத்தமான சூழ்நிலையும் வசதிகளையும் உறுப்பு நாடுகளில் அமைத்து கொடுப்பது.
- ★ தகவல் மையமாக செயல்படுதல்
- ★ நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட தேவையான வசதிகளை செய்தல்.

*ஆசியான் அமைப்பின் அதிகாரபூர்வ மொழிகள் -*

- ★ பர்மிய பிலிப்பைன்ஸ், இந்தோனேசிய கெமர், லாவோ, மலாய், மாண்டரின், தமிழ், வியட்நாமிய.

*ஆசியான் தலைமையிலான மன்றங்கள் -*

***1) ஆசியான் பிராந்திய மன்றம் (ASEAN Regional Forum):-***

- ★ ஆசியான் பிராந்திய மன்றம் 1993-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- ★ இது இருபத்தி ஏழு உறுப்பினர்களை கொண்ட பல தரப்பு குழுவாகும்.
- ★ பிராந்திய நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் தடுப்பு இராஜதந்திரத்திற்கு பங்களிக்கும் வகையில் அரசியல் மற்றும் பாதுகாப்பு பிரச்சனைகளில் ஒத்துழைப்பை எளிதாக்க உருவாக்கப்பட்டதாகும்.

***2) ஆசியான் பிளஸ் த்ரி (ASEAN +3):-***

- ★ 1997-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆலோசனை குழு ஆசியானின் பத்து உறுப்பினர்களை சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளுடன் ஒன்றிணைக்கிறது.

***3) கிழக்கு ஆசிய உச்சி மாநாடு (East Asia Summit):-***

- ★ கிழக்கு ஆசிய உச்சி மாநாடு 2005-ம் ஆண்டு முதன் முதலில் நடத்தப்பட்டது.
- ★ இந்த உச்சி மாநாடு பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் செழிப்பை மேம்படுத்த முயல்கிறது.
- ★ இது இந்தோ-பசுபிக் பிராந்தியம் எதிர்கொள்ளும் முக்கிய அரசியல், பாதுகாப்பு மற்றும் பொருளாதார சவால்கள் குறித்த உரையாடல் மற்றும் ஒத்துழைப்பிற்கான 18 பிராந்திய தலைவர்களின் மன்றமாகும்.

- ★ கிழக்கு ஆசிய குழுமம் என்ற கருத்தை முதன் முதலில் 1991-ம் ஆண்டில் அப்போதைய மலேசிய பிரதமர் மகாதீர்பின் முகமது ஊக்குவித்தார்.
- ★ முதல் உச்சி மாநாடு டிசம்பர் 14. 2005-ம் ஆண்டு மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்றது.

*ஆசியான் பார்வை - 2025*

- ★ ஆசியான் பார்வை என்பது 2015-ம் ஆண்டு ஆசியான் தலைவர்களால் கையொப்பமிடப்பட்ட ஒரு பிரகடனமாகும்.
- ★ இது 2015 முதல் 2025 வரையிலான ஆசியான் நாடுகளின் பாதையை பட்டியலிடுகிறது.
- ★ ஆசியான் மக்களை வலியுறுத்துவதன் மூலம் விழிப்புணர்வு, அடிப்படை சுதந்திரங்கள், மனித உரிமைகள் மற்றும் ஆசியான் மக்களுக்கு சிறந்த வாழ்க்கைக்கான அர்பணிப்பு போன்றவற்றை ஏற்படுத்துதல்.

*ஆசியானின் பணிகள் -*

- ★ ஐரோப்பிய ஒன்றியம் போன்று ஒரே சந்தையாக செயல்பட ஆசியான் உறுப்பினர் நாடுகளுக்குடையில் தடையற்ற பொருள், பணிகள் மற்றும் மூலதன போக்குவரத்துக்கான வழிமுறைகளை உருவாக்கும் பணியை ஆசியான் அமைப்பு செய்கிறது.
- ★ ஒரு உறுப்பு நாட்டு விற்பனையாளர் மற்ற எல்லா உறுப்பு நாடுகளிலும் விற்க தடையற்ற அனுமதியளிக்கும் பணியையும் செய்கிறது.
- ★ உறுப்பு நாடுகளின் வணிக நிறுவனங்களின் போட்டித் திறனை மேம்படுத்துவது மற்றும் பொருளாதார மேம்பாட்டு இடைவெளியை குறைப்பது.

### 6. பாசல் குழு (சர்வதேச குழு)

*குழு அமைக்கப்பட்ட ஆண்டு* - 1974
*அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது* - 1975
*குழுவின் உறுப்பினர்கள்* - 445 உறுப்பினர்கள்
*நோக்கம்* -

★ வங்கி மேற்பார்வைக்கான பாசல் கமிட்டி (BCBS) ஆனது நிதி மற்றும் வங்கிச் சந்தைகளில் உலகமயமாக்கலால் முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இக்குழு உருவாக்கப்பட்டது.
★ BCBS ஆனது தேசிய வங்கி மற்றும் நிதிச்சந்தைகளின் மேற்பார்வை அமைப்புகளுக்கு ஒழுங்குமுறை சிக்கல்களை தீர்ப்பதில் மிகவும் ஒருங்கிணைந்த உலகமயமாக்கப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்ள உதவுகிறது.

*பரிந்துரைகள் -*

★ வங்கி மேற்பார்வையின் அடிப்படை குழு உலகெங்கிலும் உள்ள வங்கிக் கண்காணிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கும் வங்கி கண்காணிப்பு துறையில் உள்ள முக்கியமான சிக்கல்களை புரிந்துகொள்வதற்கும் உதவுகிறது.
★ பாசல்-I அறிக்கையானது 1988-ல் இறுதி செய்யப்பட்டு 1992-ல் நடைமுறைக்கு வந்தது.
★ இதனைத் தொடர்ந்து பாசல்-II 2004-ல் இறுதி செய்யப்பட்டு 2008-ல் நிதி நெருக்கடி ஏற்பட்ட போது செயல்பாட்டில் இருந்து.
★ பாசல்-III -யை 2011-ம் ஆண்டு ஆரம்பத்தில் தொடங்கப்பட்டு 2015-க்குள் செயல்படுத்த திட்டமிடப்பட்டது.

### 7. கோய்போரியா குழு

*குழு அமைக்கப்பட்ட ஆண்டு* - 1990
*அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது* - 1990
*குழுவின் தலைவர்* - M.N.கோய்போரியா (Goiporia)

*நோக்கம் -*

★ வங்கிகளில் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்கான ஆணையை இக்குழு வழங்குகிறது.

*பரிந்துரைகள் -*

★ இந்தியா முழுவதும் உள்ள அனைத்து வங்கிகளும் வாடிக்கையாளர்களின் புகார் புத்தகத்தை வைத்திருக்க வேண்டும். இதனால் வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் அந்த பிரச்சனைகள் குறித்த சரியான நடவடிக்கைகள் சரியாக பதிவு செய்யப்படவும் வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

### 8. ஹில்டன் யங் குழு

*குழு அமைக்கப்பட்ட ஆண்டு* - 1920
*அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது* - 1926
*குழுவின் தலைவர்* - ஹில்டன் யங்

*நோக்கம் -*

★ இந்திய நாணயம் மற்றும் நிதிக்கான ராயல் கமிஷன் இந்த குழுவின் மூலம் அமைக்கப்பட்டது.

*பரிந்துரைகள் -*

★ இந்த குழு மத்திய வங்கியை தனியாக உருவாக்க வேண்டும் என்று 1926-ஆம் ஆண்டு கூறியது.
★ 1927-ஆம் ஆண்டு மேற்க்கண்ட பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு மசோதா சட்டப் மன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## தீன் தயாள் அந்தியோதயா யோஜனா-DAY (Deendayal Antyodaya Yojana)

❖ ***இத்திட்டமானது தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM) மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (DAY-NRLM) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும்.***

*1) தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்*

***(DAY-NRLM -Deendayal Antyodaya Yojana - National Rural Livelihood Mission):-***

*ஆண்டு* - 2011

*நோக்கம்* -

★ கிராமப்புற மக்களின் நிலையான வாழ்க்கைக்கான திறமையான நிறுவன தளங்களை (சுய உதவி குழு மேம்பாடு, திறன் மேம்பாட்டு பயிற்சி, சுய வேலைவாய்ப்பு) வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்.

*முக்கிய அம்சங்கள் -*

★ DAY-NRLM என்பது 1999-ல் தொடங்கப்பட்ட சுவர்ண ஜெயந்தி கிராம் ஸ்வரோஜ்கர் யோஜனாவின் மறுசீரமைக்கப்பட்ட வடிவமாகும்.

★ மகளிர் சுய உதவி குழுக்கள் அமைத்து வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ இத்திட்டம் 2015-ல் DAY என பெயர் மாற்றப்பட்டது.

*2) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்*

***(DAY-NULM - DAY-National Urban Livelihood Mission):-***

*ஆண்டு* - 2013 செப்டம்பர் 24.

*நோக்கம்* -

★ இத்திட்டம் நகர்ப்புற மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றிட திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து சுய தொழில் அமைக்க ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

*இத்திட்டத்தின் கீழ் செயல்படும் துணை திட்டங்கள் -*

★ சமூக அணிதிரட்டல் (ம) நிறுவன மேம்பாடு SM & ID.

★ திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு (EST & P)

★ திறன் உருவாக்கம் மற்றும் பயிற்சி (CBT)

★ சுயதொழில் திட்டம் (SEP)

★ நகர்ப்புற வீடற்றவர்களுக்கான தங்குமிடம் திட்டம் (SUH)

★ நகர்ப்புற தெரு வியாபாரிகளுக்கு ஆதரவு (SUSV)

★ புதுமையான மற்றும் சிறப்பு திட்டம் (ISP)

## தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) (National Skill Development Corporation)

*ஆண்டு* - 2008 ஜூலை 31

*நோக்கம்* -

★ தொழில்களில் பயிற்சி பெறுபவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் சர்வதேச தரத்தை கருத்தில் கொண்டு திறன்களைப் பயிற்றுவித்து அவற்றை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

*முக்கிய அம்சங்கள் -*

★ இந்த அமைப்பு அளவிடக்கூடிய மற்றும் இலாபகரமான தொழிற்பயிற்சி முயற்சிகளை உருவாக்க நிதி வழங்குகிறது.

★ தரமான மற்றும் பெரிய தொழில் பயிற்சி மையங்களை உருவாக்குகிறது.

★ 2400-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் 10 நிலைகளில் தொழிற்பயிற்சி, 2.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன் அடிப்படையிலான பாடத்திட்டத்தை வழங்குகிறது.

*தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் கீழ் உள்ள திட்டங்கள் சில:*

★ பிரதான் மந்திரி கௌஷல் கேந்திரா

★ பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY)

★ இந்திய சர்வதேச திறன் மையம் (IISCS)

## பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத்திட்டம்

*ஆண்டு* - 2022, மார்ச் 18

*நோக்கம்* -

★ அடுத்த 5 ஆண்டுகளில் அரசு தொடக்கப்பள்ளிகள் உட்பட அனைத்து அரசுப்பள்ளிகளிலும் ஸ்மார்ட்கிளாஸ் (நவீனமயமாக்கப்பட்ட வகுப்புகள்) அறைகளுடன் கூடிய வளர்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

*நிதி* - ரூ.7000 கோடி

*முக்கிய அம்சங்கள் -*

★ இத்திட்டத்தில் அரசுப்பள்ளிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய வகுப்பறைகள் கட்டப்படும்.
★ திறன்மிகு வகுப்பறைகளும் உருவாக்கப்படும்
★ அதிநவீன கணினி ஆய்வகங்கள் உருவாக்கப்படும்
★ மாதிரி பள்ளிகள் உருவாக்கப்படும். இதன்மூலம் அனைத்து பள்ளிகளிலும் டிஜிட்டல் மூலம் கல்வி வழங்குதல் இதன் நோக்கங்களாகும்.
★ மாநிலத்தில் 18,000 புதிய வகுப்பறைகள் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும் என அறியப்பட்டுள்ளது.

## கல்லூரி கனவுத் திட்டம்

*ஆண்டு* -

★ 25 ஜூன் 2022
★ கல்லூரி கனவு எனும் தொழில் வழிகாட்டி முயற்சியை தமிழக முதல்வர் அவர்கள் ஜூன் 25, 2022 அன்று தொடங்கினார்.

*நோக்கம்* -

★ கல்லூரி கனவு திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் முக்கிய நோக்கம் 12-ம் வகுப்பினை நிறைவுற்ற மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குவதாகும்.
★ கல்லூரியில் சேரும் அனைத்து மாணவர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்குகிறது.
★ இந்த திட்டத்தின் மூலம் மாணவர்கள் பல்வேறு படிப்புகள், கல்லூரிகள், நுழைவு தேர்வுகள், கல்வி சட்டங்கள், உதவித் தொகைகள் போன்றவற்றை பற்றிய தகவல்களை பெறுவார்கள்.

*முக்கிய அம்சங்கள் -*

★ தமிழ்நாட்டின் வெவ்வேறு கல்லூரிகளில் 12-ம் வகுப்பு முடித்த பிறகு மாணவர்கள் வெவ்வேறு துறைகளை தேர்வு செய்யலாம்.
★ இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் ஜூன்29, 30 மற்றும் ஜூலை 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் நடைபெறும்.
★ இந்தியாவின் முதல் 100 கல்லூரிகளில் தமிழ்நாட்டை சேர்ந்த 30 கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன மேலும் அனைவருக்கும் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.
★ இந்த திட்டம் 2026-ஆம் ஆண்டுக்குள் 2 மில்லியன் கல்லூரி இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சிற்பி திட்டம்

*ஆண்டு* - ஜூன் - 2022

*நோக்கம்* -

★ காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான உறவை மேம்படுத்தவும், மாணவர்களை பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்கவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்.
★ பொறுப்புள்ள மாணவர்கள், காவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால் குற்றங்களை முற்றிலுமாக தடுத்து நிறுத்த முடியும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## எமது புத்தகங்கள்




**இந்த புத்தகங்களை ONLINE-ல் ORDER செய்ய SCAN செய்யவும்**

Rs. 600 /-


**PRAGADEESH PUBLICATION**

2 ND FLOOR, OLD HEAD POST OFFICE, NEAR PARK,
GANDHI NAGAR, ATTUR (TK), SALEM (DT), TAMILNADU, PIN – 636102

84892 98781